DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF GUDALUR

| | |
|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **CC No.20/2024** |
| Deposition of witness for | Prosecution **PW - 2**<br>Deffence<br>Court |

Name : **திரு.ராஜு**
Father's Name : திரு.
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.08.2025.

**(எதிரி ஆஜர்.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது தேவர்சோலை 1-வது டிவிசனில் குடியிருந்து வருகிறேன், சூப்பர்வைசராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 – ஐ எனக்கு தெரியும். அவர் BSNL -ல் பணிபுரியும் அதிகாரியாக அவ்வப்போது வந்து ஆய்வு செய்துவிட்டுசெல்வார். கடந்த 24.12.2023 அன்று இரவு 01.00 மணியிலிருந்து 01.30

மணியளவில் வாகனத்தில் இரும்பை போடும் சத்தம் கேட்டது. நான் அப்போது எனது வீட்டில் இருந்தேன். சத்தம்கேட்டு நான் வீட்டில் இருந்து வெளியில் வந்த பார்த்தபோது, 3 நபர்கள் Exchange -ல் இருந்து இரும்பு பொருட்களை தூக்கி பிக்கப் போன்ற வாகனத்தில் போட்டுக்கொண்டிருந்தனர். மீண்டும் Exchange -லிருந்து பொருட்களை எடுப்பதற்காக மேலே வந்து கொண்டிருந்தனர். 3 பேர்கள் இருந்ததால், அங்கு யானை நடமாட்டம் இருப்பதால் வனத்துறை சம்பந்தப்பட்ட ஆட்களாக இருக்கும் என்று சிறிது நேரம் நின்று பார்த்து அவர்களை மேலே வரும்போது பார்த்தபோது, அவர்கள் வனத்துறையை சார்ந்தவர்கள் அல்ல எனத்தெரிந்து யார் நீங்கள் இந்த நேரத்தில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டபோது அவர்கள் அருகில் இருந்த காட்டிற்குள் ஓடிவிட்டனர்.

2. நான் எனது கையில் இருந்த பவர்புல்லான டார்ச்-யை வைத்து அடித்து பார்த்தபோது வண்டியின் பின்பக்கம் எனக்கு நன்கு தெரிந்தது. நான் வண்டியின் பின்புறம் இருந்த வண்டியின் பதிவு எண்ணான TN 43 Y 7822 என்று அதில் காணப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனத்தின் பின்புறம் தான் அந்த எண் உள்ளது. (**அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆகும்**)

3. அந்த நபர்கள் வண்டியை எடுத்துச் சென்றுவிட்டனர். யானை நடமாடும் பகுதி என்பதால் எனக்கும் பயம் இருந்தது. மறுநாள் காலை 06.00, 06.30 மணியளவில்

நான் மேலே சென்று BSNL Exchange -ஐ பார்த்தபோது அங்கு ஸ்டோர் ரூம் மற்றும் BSNL ஆபிஸ் கதவும் உடைக்கப்பட்டிருந்தன. நான் உள்ளே சென்று பார்க்கவில்லை. உடனே நான் அ.சா.1 ஆன ரவிக்கு போன் மூலம் இது குறித்து தகவல் தெரிவித்தேன். அவர்கள் வந்த உடன் நான் அங்கிருந்து வந்துவிட்டேன்.

4. அன்றைய தினமே போலீசார் 10.00 அல்லது 11.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு என்னை அழைத்து விசாரித்ததற்கு சாட்சியாக மகஜர் தயார் செய்யததில் நான் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்தேன். என்னுடன் தினேஷ் என்பவரும் மகஜரில் கையெழுத்து செய்தார். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகும்**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

1. காவல் நிலையம் எனது வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் ஒரு அரை கி.மீ தூரம் இருக்கும். உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் நான் போலீசின் அவசர உதவி எண்ணான 100-க்கு தகவல் கொடுத்திருப்பேன், சம்பவம் நடைபெறாததால் தான் நான் அவ்வாறு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அப்போது அந்த எண் பற்றி தெரியாது. போலீசார் விசாரித்த பின்பு தான் மேற்படி எண்ணை எனது கைபேசியில் பதிவு செய்து கொடுத்தார்கள்.

2. சம்பவத்திற்கு முன்பு நான் அ.சா.1-இடம் தொலைபேசியில் பேசி உள்ளேனா என்றால் பேசியுள்ளேன் BSNL பணியாளரின் நம்பர் ஒரு பேப்பரில் எழுதி கொடுத்துள்ளார்கள். BSNL அலுவலகத்தில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் நான் தான் அங்கு சென்று பவர் ஆன் செய்துவிட்டு வருவேன்.

3. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

Sd/- G.SARAVANAKUMAR, B.A., B.L., (HON'S)
**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**